# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.936/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பொன்னையா | த–பெ | இராமலிங்கம் |
| ஊர்: | : | நெற்குப்பை | சமயம்: | |
| வயது: | : | 61/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.05.2025**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் நெற்குப்பையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 19.07.2018 அன்று எனது மகன் மோகன சிவசண்முகம் மற்றும் சதீஸ் குமார் என்பவரும் இருசக்கர வாகனம் Hero Honda அதன் பதிவு எண். TN63AU1957 என்ற வாகனத்தை சதீஸ் குமார் என்வர் ஓட்டி எனது மகன் பின்னால் அமர்ந்து மாலை 6.00 மணியளவில் மாதவராயன்பட்டியில் கிளம்பி கல்லலுக்கு சென்று கொண்டிருந்த பொழுது இடது புறமாக சம்பவ சாலையில் சம்பவ இடத்தில் அவர்கள் சென்றுகொண்டிருந்த பொழுது எதிர் திசையில் ஆட்டோ ஒன்றை ஓட்டிய நபர் அவர்கள் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியதாக நான் கேள்விப்பட்டு தெரிந்து கொண்டு சம்பவ இடம் சென்று பார்த்த பொழுது எனது மகன் பின் தலையில் மற்றும் வயிற்றுக்கு கீழ் பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்ததது. கைகளில் உராய்வு காயங்கள் இருந்தது. மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிய சதீஸ் குமார் என்பவர் இந்த விபத்தில் நிகழ்விடத்தில் இறந்து விட்டார். ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்த பொழுது வர தாமதம் ஆனதால் போலீஸ் ஜீப் வாகனத்தில் செம்பனூர் ஆரம்ப சுகாதார மையத்திற்கு சிகிச்சைக்காக சென்றோம். பின்னார் அங்கிருந்து சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சையில் இருந்த எனது மகன் சற்று நேரத்தில் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார். போலீசார் மருத்துவமனையில் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ 1**

**<u>குறுக்கு விசாரணை</u>**

மேற்படி சம்பம் தொடர்பாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் சொல்லி தான் விவரம் தெரியும். வழக்கு

சம்மந்தமாக நிலையத்தில் ஆஜர் ஆகி எழுத்து மூலமான புகாரை கொடுத்தேன். போலீசார் என்னை 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். எனது மகன் விபத்தில் இறந்தது தொடர்பாக இழப்பீடு கோரீ வழக்கு தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. நான் தவறான தகவலின் பேரில் புகார் கொடுத்து விட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/. J. Karmegakannan.,B.A.,B.L.
Judicial Magistrate, Karaikudi.